Office of Principal Chief Conservator of Forests
05 2019
Chennai-15

(47)

-15

சுருக்கம்

வனம் – 2017–2018 ஆம் ஆண்டிற்கான அறிவிப்பு – 2018–2019 ஆம் நிதியாண்டிற்கு அறிவிக்கப்பட்ட வனப்பணியாளர்களுக்கான 14 குடியிருப்பு கட்டடங்களை கட்டுவதற்கு ரூ.182.03 இலட்சம் மற்றும் 2019–2020 ஆம் நிதியாண்டில் வனப்பணியாளர்களுக்கான 39 குடியிருப்பு கட்டடங்களை கட்டுவதற்கு ரூ.600.98 இலட்சம் முதன்மை தலைமை வனப்பாதுகாவலருக்கு ஒப்பளிப்பு செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

சுற்றுச்சூழல் – வனத் (வனம்.11) துறை

அரசாணை (நிலை) எண்: 119

நாள்: 25.10.2019
விகாரி, ஐப்பசி – 8
திருவள்ளுவர் ஆண்டு 2050

படிக்க:-

1 அரசாணை (நிலை) எண்.4, சுற்றுச்சூழல் – வனத் (வனம்.11) துறை, நாள் 19.01.2018.

2 அரசாணை (நிலை) எண்.138, சுற்றுச்சூழல்–வனத் (வனம்.11) துறை, நாள் 01.11.2018.

3 அரசாணை (நிலை) எண்.25, சுற்றுச்சூழல்–வனத் (வனம்.11) துறை, நாள் 27.02.2019.

4 முதன்மை தலைமை வனப்பாதுகாவலரின் கடித ந.க.எண். டிஎஸ்1/24833/2017, நாள் 03.04.2019 மற்றும் 10.06.2019.

5 அரசாணை (டி) எண்.177, சுற்றுச்சூழல் – வனத் (வனம்.11) துறை, நாள் 15.07.2019.

ஆணை :-

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், 2017–2018 ஆம் ஆண்டு வனத்துறை மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள் வனக்காப்பாளர் படிநிலையிலிருந்து, மாவட்ட வன அலுவலர் படிநிலையிலுள்ள, அலுவலர்கள் வரையிலுள்ள அலுவலர்களுக்கு 2017–2018, 2018–2019, 2019–2020 மற்றும் 2020–2021 ஆகிய ஆண்டுகளில் முறையே ரூ.2 கோடி, ரூ.4 கோடி, ரூ.6 கோடி மற்றும் ரூ.8 கோடி ஆக மொத்தம் ரூ.20 கோடி செலவில் வனப்பணியாளர் குடியிருப்புக் கட்டடங்கள் கட்டப்படும் என அறிவித்தார்கள்.

2. இவ்வறிவிப்பின்படி மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், 2017–2018 ஆம் ஆண்டில் 16 வனப்பணியாளர்கள் குடியிருப்பு கட்டடங்களை, கட்ட ரூ.2 கோடிக்கு நிர்வாக ஒப்புதலும், 8 குடியிருப்பு கட்டடங்களை 2017–2018 ஆம் நிதியாண்டில் கட்டுவதற்கு ரூ.103.62 இலட்சம் நிதி ஒப்புதலும் வழங்கி ஆணைகள் வெளியிடப்பட்டன. மேலும், 2017–18 ஆம் நிதியாண்டில் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்ட மீதமுள்ள 8 குடியிருப்பு கட்டடங்களை 2018–19 ஆம் நிதியாண்டில் கட்ட ரூ.96.38 இலட்சம் ஒப்பளிப்பு செய்து மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டன.

3. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், 2018–19 ஆம் நிதியாண்டில் 15 குடியிருப்பு கட்டடங்களை கட்டுவதற்கு ரூ.217.80 இலட்சத்திற்கு அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கி ஆணைகள் வெளியிடப்பட்டன. 2018–19 ஆம் நிதியாண்டில் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்ட 15 குடியிருப்பு கட்டடங்களை 2019–20 ஆம் நிதியாண்டில் கட்டுவதற்கு ரூ.217.80 இலட்சம் ஒப்பளிப்பு செய்து மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டன.

4. மேலே நான்காவதாக படிக்கப்பட்ட முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் கடிதத்தில், 2018–2019 ஆம் நிதியாண்டிற்கு அறிவிக்கப்பட்ட ரூ.4 கோடியில், மீதமுள்ள 14 குடியிருப்பு கட்டடங்கள் கட்ட நிர்வாக ஆணையும், மேலும் இக்கட்டடங்களை கட்ட ரூ.182.03 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடும் வழங்குமாறு அரசைக் கோரியுள்ளார். 2018–2019 ஆம் நிதியாண்டில் கட்டப்பட உள்ள 14 குடியிருப்பு கட்டடங்கள் குறித்த விவரத்தினை பின்வருமாறு தெரிவித்துள்ளார் :–

| வ. எண் | மண்டலம் | கோட்டம் | கட்டப்பட உள்ள குடியிருப்பு கட்டடத்தின் பெயர் | பரப்பு (ச.மீ) | தொகை (ரூ. இலட்சத்தில்) | 2018–19க்கான விபரம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | எண்–ணிக்கை | தொகை (ரூ. இலட்–சத்தில்) |
| 1 | வேலூர் | திருவண்ணாமலை | வனச்சரக அலுவலர் குடியிருப்பு | 64.80 | 14.20 | 1 | 14.20 |
| | திண்டுக்கல் | கரூர் | | | | 1 | 14.20 |
| | மதுரை | வன உயிரினம், தேனி | | | | 1 | 14.20 |
| | | தேனி | | | | 1 | 14.20 |
| | விருதுநகர் | வன உயிரினம், இராமநாதபுரம் | | | | 1 | 14.20 |
| | | | Sub Total | | | 5 | 71.00 |
| 2 | வேலூர் | வேலூர் | வனவர் குடியிருப்பு | 52.14 | 11.43 | 1 | 11.43 |
| | | திருப்பத்தூர் | | | | 1 | 11.43 |
| | | திருவண்ணாமலை | | | | 1 | 11.43 |
| | திண்டுக்கல் | திண்டுக்கல் | | | | 1 | 11.43 |
| | திருச்சி | திருச்சி | | | | 1 | 11.43 |
| | | | Sub Total | | | 5 | 57.15 |
| 3 | வேலூர் | வேலூர் | ஒருங்கிணைந்த வனக்காப்பாளர் மற்றும் வனக்காவலர் குடியிருப்பு | 81.92 | 17.96 | 1 | 17.96 |
| | திண்டுக்கல் | கொடைக்கானல் | | | | 1 | 17.96 |
| | | | Sub Total | | | 2 | 35.92 |
| 4 | மதுரை | வன உயிரினம் தேனி | வனக்காப்பாளர் (ம) ஓட்டுநர் குடியிருப்பு | 40.96 | 8.98 | 1 | 8.98 |
| | | | Sub Total | | | 1 | 8.98 |
| 5 | மதுரை | தேனி | வனக்காப்பாளர் குடியிருப்பு | 40.96 | 8.98 | 1 | 8.98 |
| | | | Sub Total | | | 1 | 8.98 |
| | | | Total | | | 14 | 182.03 |

5. முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மேலும் தனது கடிதத்தில், 2019–2020 ஆம் நிதியாண்டில் கட்டப்படவுள்ள 39 கட்டடங்கள் குறித்த விவரங்களை பின்வருமாறு தெரிவித்து, இக்குடியிருப்பு கட்டடங்கள் கட்ட ரூ.6.00 கோடி செலவாகும் எனவும், எனவே 2019–2020 ஆம் நிதியாண்டில் கட்டப்படவுள்ள 39 கட்டடங்களுக்கு தேவையான நிதியினை ஒதுக்கீடு செய்யுமாறு அரசைக் கோரியுள்ளார்:–

| வ. எண் | மண்டலம் | கோட்டம் | கட்டப்பட உள்ள குடியிருப்பு கட்டடத்தின் பெயர் | பரப்பு (சமீ) | தொகை (ரூ. இலட்சத்தில்) | 2019–20க்கான விபரம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | எண்ணிக்கை | தொகை (ரூ. இலட்சத்தில்) |
| 1 | வேலூர் | திருவண்ணாமலை | வனச்சரக அலுவலர் குடியிருப்பு | 64.80 | 15.62 | 2 | 31.24 |
| | திருச்சி | திருச்சி | | | | 1 | 15.62 |
| | | புதுக்கோட்டை | | | | 1 | 15.62 |
| | | தஞ்சாவூர் | | | | 1 | 15.62 |
| | மதுரை | மதுரை | | | | 1 | 15.62 |
| | | | Sub Total | | | 6 | 93.72 |
| 2 | வேலூர் | வேலூர் | வனவர் குடியிருப்பு | 52.14 | 12.57 | 2 | 25.14 |
| | | திருப்பத்தூர் | | | | 2 | 25.14 |
| | | திருவண்ணாமலை | | | | 4 | 50.28 |
| | திண்டுக்கல் | திண்டுக்கல் | | | | 1 | 12.57 |
| | திருச்சி | கரூர் | | | | 1 | 12.57 |
| | | பெரம்பலூர் | | | | 1 | 12.57 |
| | | புதுக்கோட்டை | | | | 1 | 12.57 |
| | | வன உயிரின கோட்டம், நாகை | | | | 1 | 12.57 |
| | விருதுநகர் | அணில்கள் சரணாலயம், ஸ்ரீவில்லிப்புத்தூர் | | | | 1 | 12.57 |
| | | இராமநாதபுரம் | | | | 1 | 12.57 |
| | மதுரை | தேனி | | | | 1 | 12.57 |
| | | | Sub Total | | | 16 | 201.12 |
| 3 | வேலூர் | வேலூர் | ஒருங்கிணைந்த வனக்காப்பாளர் மற்றும் வனக்காவலர் குடியிருப்பு | | 19.75 | 2 | 39.50 |
| | திண்டுக்கல் | திண்டுக்கல் | | | | 2 | 39.50 |
| | | கரூர் | | | | 1 | 19.75 |
| | திருச்சி | பெரம்பலூர் | | | | 1 | 19.75 |
| | | அரியலூர் | | | | 1 | 19.75 |
| | | புதுக்கோட்டை | | | | 1 | 19.75 |
| | மதுரை | மதுரை | | | | 1 | 19.75 |
| | | வன உயிரினம், தேனி | | | | 4 | 79.00 |
| | ஆனைமலை புலிகள் காப்பகம், பொள்ளாச்சி | திருப்பூர் | | | | 1 | 19.75 |
| | | | Sub Total | | | 14 | 276.50 |
| 4 | ஆனைமலை புலிகள் காப்பகம் பொள்ளாச்சி | பொள்ளாச்சி | வனக்காப்பாளர் (ம) ஓட்டுநர் குடியிருப்பு | 40.96 | 9.88 | 1 | 9.88 |
| | மதுரை | வன உயிரினம், தேனி | | | | 2 | 19.76 |
| | | | Sub Total | | | 3 | 29.64 |
| | | | Total | | | 39 | 600.98 |

6. மேலே பத்தி 4 மற்றும் 5–ல் உள்ள முதன்மை தலைமை வனப்பாதுகாவலரின் கருத்துருவினை அரசு கவனமாக ஆய்வு செய்து, கீழ்க்கண்டவாறு ஆணையிடலாம் எனக் கருதி அவ்வாறே ஆணையிடுகிறது :-

(i) 2018–2019 ஆம் ஆண்டிற்கு அறிவிப்பில் 29 குடியிருப்பு கட்டடங்கள் கட்ட ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.4 கோடியில், மேலே பத்தி 4–இல் விவரிக்கப்பட்டுள்ள மீதமுள்ள 14 குடியிருப்பு கட்டடங்களை 2019–2020 ஆம் ஆண்டில் கட்டுவதற்கு நிர்வாக ஒப்புதலும், அதற்கான நிதி ரூ.182.03 இலட்சம் (ரூபாய் ஒரு கோடியே எண்பத்திரண்டு இலட்சத்து மூன்றாயிரம் மட்டும்) ஒப்பளிப்பு செய்யப்படுகிறது.

(ii) 2019–2020 ஆம் ஆண்டிற்கு அறிவிப்பின்படி, மேலே பத்தி 5–இல் விவரிக்கப்பட்டுள்ள 39 குடியிருப்பு கட்டடங்கள் கட்ட நிர்வாக ஒப்புதலும் அதற்கு தேவையான நிதி ரூ.600.98 இலட்சம் (ரூபாய் ஆறு கோடியே தொண்ணூற்று எட்டாயிரம் மட்டும்) ஒப்பளிப்பு செய்யப்படுகிறது.

7. மேலே பத்தி–6ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும் :-

"4406– காடுவளர்ப்பு, வனவிலங்குகள் பாதுகாப்பு குறித்த மூலதனச் செலவு – 01 – காடு வளர்ப்பு – 070 – தகவல் தொடர்பும் கட்டங்களும் – மாநிலச் செலவினங்கள் – JB – கட்டடங்கள் கட்டுதல் – 416 பெரும்பணிகள் – 01 – பெரும் பணிகள்.

(IFHRMS DPC: 4406 – 01 – 070 – JB – 41601)
(பழைய DPC: 4406 – 01 – 070 – JB – 1600)"

8. மேலே பத்தி 6–ல் ஒப்பளிக்கப்பட்ட கூடுதல் செலவினத்தினை மேற்கொள்ள கூடுதல் நிதியொதுக்கம் 2019–2020 ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும் மேற்கண்ட செலவினத்திற்கு 2019–2020 ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் கொணர்ந்து சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 6–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. மேலும் பத்தி 6–ல் அனுமதிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2019–2020 ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் (Supplementary Estimates) சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதித் (கா.ப.பா(ம)மீ) துறைக்கு அனுப்பி வைக்குமாறு முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

...... 5

9. இவ்வாணை, நிதித் துறையின் அலுவல் சார்பற்ற எண்.49614/ நிதித்(கா.ப.பா.வ(ம)மீ.வ)துறை/2019, நாள் 22.10.2019–ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.1859 (ஆயிரத்து எண்ணூற்று ஐம்பத்து ஒன்பது) வெளியிடப்படுகிறது.

// ஆளுநரின் ஆணைப்படி //

ஷம்பு கல்லோலிகர்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
முதன்மை தலைமை வனப்பாதுகாவலர், சென்னை–15.
தலைமை மாநில கணக்காயர், சென்னை–18.
மாநில கணக்காயர், சென்னை–18.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை–35.
நகல்
நிதித் (கா.ப.பா.வ (ம) மீ.வ/வ.செ பொது–I/II) துறை, சென்னை–9.
உள் (போ.வ) துறை, சென்னை–9.
சட்டத் துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு/ உதிரி.

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்

Financial Adviser
Office of the
Principal Chief Conservator of Forest
Chennai - 15.